வைத்து அந்த குறுகலான பகுதிகளில் ஓடுவதற்கான ஏற்பாட்டை அமைச்சரவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு தனிப்பட்ட வழித் தடத்தைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். அதிலே பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்குமேயானால், பொது மக்களுக்கு அவசியம் என்று இருந்து, அந்த வண்டிகள் சரியாக வராமல் இருக்குமேயானால், தேவையான நடவடிக்கையை, அதுசம்பந்தப்பட்ட போக்குவரத்து நடவடிக்கையை எடுக்கலாம்.

மேற்கு ஜெர்மனி, மொரிஷ்யஸ் ஆகிய நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையம்.

450—(* வினா எண் 10403) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு ஜெர்மனி, மொரிஷ்யஸ் ஆகிய நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-40)

திரு. எஸ். இராசாராமன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு 'இல்லை' என்று சொன்னார்கள். தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளான மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற பகுதிகளில் பூம்புகார் விற்பனை நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு அரசு உத்தேசித்து உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கனவே இல்லை என்று சொன்னேன். இப்போது நம்முடைய மாநிலத்திலே கொஞ்சம் அதிகமாக விற்பனை செய்வதற்கான முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறோம். புதுடெல்லி, பெங்களூரில் இப்போது இருக்கின்றன. கல்கத்தாவிலே ஒன்று ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இப்படி நம்முடைய நாட்டில் எங்கெங்கு அதிகமாக விற்பனை செய்ய முடியுமோ அதைப் பார்த்துவிட்டு வெளிநாடுகளைப்பற்றி யோசிக்கலாம் என்பதற்காகத்தான் இல்லை என்று சொன்னேன்.

திரு. எஸ். இராசாராமன்: தலைவர் அவர்களே, அந்நிய நாட்டிற்கு பூம்புகார் சம்பந்தப்பட்ட சில கைவினைப் பொருள்கள் எல்லாம் அனுப்பி வைப்பதன் மூலமாக அந்நியச் செலாவணி நமக்குக் கிடைக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் பல்வேறு தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற நல்ல கைவினைஞர்களுக்கு பெருமை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே வெளிநாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையங்களைத் துவக்குவதற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் வெளிநாடுகளில் ஆரம்பித்து நடத்துவது என்பது கடுமையான நிலைமை. வெளியிலே ஏற்றுமதி செய்து அங்கே தனியாக ஷோ ரூம் வைப்பது என்பது, நம்முடைய தகுதியை உயர்த்திய பின்புதான் அதைப்பற்றி யோசிக்க முடியும்.

மோட்டார் வாகன சட்டத் திருத்தம்.

451—(* வினா எண். 11559) திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வாகனச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?